**பன்னல பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 27 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் *பன்னல* பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய சம்பள நிதியத்தின் நிலுவை மீதியிலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 1,200,00 தொகை மற்றும் முன்னைய ஆண்டின் நவம்பர் திசெம்பர் தவணைப் பணமான ரூபா 24,565 தொகை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு ஓயூதியப் நலன் மற்றும் பணிக்கொடை செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 17 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் ரூபா 1,224,565 தொகை ஒய்வூதியக் கணக்கிற்கும் செலுத்த வேண்டிய ஓய்வூதியக் கணக்கிற்கும் சீராக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய சம்பள நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 4,400,396 என குறிப்பிடப்பட்டிருக்கையில் மீளாய்வாண்டின் இறுதியின் போதும் மீண்டும் 59 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் ரூபா 1,724,961 செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதியம் கணக்கீடு செய்த காரணத்தால் ஆண்டின் மிகையில் மற்றும் செலவினம் கடன்கொடுத்தோர் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய சம்பள பட்டியலின் பிரகாரம் செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,974,091 ஆக இருந்த போதிலும் பேரேட்டிலும் / கணக்கிலும் செலுத்த வேண்டிய ஓய்வூதிய மீதி ரூபா 5,225,357 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் கடன்கொடுத்தோர் ரூபா 3,251,266 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டிற்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 21,185,555 ஆன முத்திரைக் கட்டண வருமானம் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் வருமான மற்றும் செலவினக் கடன்பட்டோர் அப் பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமான ரூபா 8,459,063 ஆக இருந்த போதிலும், அது ரூபா 7,805,142 என கணக்கீடு செய்த காரணத்தினால் ரூபா 653,921 ஆல் ஆண்டின் வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 180 நாட்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பேரில் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பல் தொகையில் ஒரு பகுதியாக கிடைக்கப் பெற்ற ரூபா 1,700,000 ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) சபையின் பெயரில் வைக்கப்பட்டிருந்த 04 நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த வட்டி ரூபா 28,340 மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 13,440 ஆக வட்டியுமாக மொத்தம் ரூபா 41,780 தொகை வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தேசிய சேமிப்பு வங்கியின் குளியாப்பிட்டிய கிளையில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 2 நிலையான வைப்புக்களின் மீதியான ரூபா 186,788 தொகை நிலையான வைப்புக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் வங்கி மீதிகள் உறுதிப்படுத்தல் சான்றிதழின் பிரகாரம் ஊழியர் பிணை வைப்புக்கள் மற்றும் ஊழிய பிணை முதலீட்டுக் கணக்கின் மீதி ரூபா 448,039 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 362,196 என காண்பிக்கப்பட்டமையால் ஊழியர் பிணை வைப்பு மற்றும் ஊழியர் பிணை முதலிட்டு மீதி ரூபா 85,843 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஒ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 80,652 பெறுமதியான மர இருப்பு உரிய செலவினக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டு இருப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்படாமை காரணமாக ஆண்டின் இறுதி மீதி அப்பெறுமானத்தினால் கூடுதலாகவும் வழங்கல் மற்றும் உபகரணங்கள் செலவினம் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஓ) மீளாய்வாண்டின் இறுதி இருப்பு கணிப்பீட்டின் போது சேதனப் பசளை செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதி இருப்பு மற்றும் கொங்கிரீட் தூண்கள் செயற்திட்டத்தின் எஞ்சிய தூண்களின் பெறுமதி முறையே ரூபா 150,000 மற்றும் ரூபா 213,750 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதி சேர் அடிப்படையிலான வரிக் கணக்கில் ரூபா 1,268,631 ஆன தவறான பொறுப்பு மீதியொன்று கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) வெட்டகேயாவ மற்றும் கந்தான கெதர ஆகிய இரண்டு வியாபார தொகுதிகளின் 08 கடைகளுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 1,523,934 முற்கொடுப்பனவு (கிமணி) தொகை கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கா) மீளாய்வாண்டின் போது வீதவரிக்காக கழிக்கப்பட்ட ரூபா 298,321 ஆன கொடுத்த வட்டி ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கி) மீளாய்வாண்டின் போது எதிர்வரும் ஆண்டுகளுக்காக கிடைத்த வீதவரி ரூபா 117,290 முற்பணமாக கிடைத்த வீதவரியாக கணக்குகளில் காண்பிக்கப்படாமையால் அப்பெறுமதியால் மீளாய்வாண்டின் நிலுவை வீதவரி மீதி குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

13 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளின் இடையே ரூபா 59,906,714 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கிடைக்க வேண்டிய மீதிகளில் குறிப்பாக இனங்காணப்படாத ரூபா 1,031,551 ஆன நிலுவை வீட்டு வாடகை மீதி காணப்பட்டதுடன் அத்தொகை 2009 ஆம் ஆண்டிலிருந்து வரும் மீதியொன்றாகும்.

(ஆ) கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 11,000 ஆக மீதி மற்றும் ரூபா 18,708,947 ஆன கிடைக்க வேண்டிய மூலதன மானியம் மீதி என்பன 2009 ஆக ஆண்டிலிருந்து வந்த போதிலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கிடைக்க வேண்டிய கணக்குகளில் ரூபா 55,826,625 ஆன நிர்மாணக் கடன்பட்டோர் மீதியொன்று காணப்பட்டதுடன் 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 22,372,856 கிடைத்திருக்கவில்லை. ரூபா 10,963,860 தொகை 2013 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து வரும் மீதியொன்றாக இருந்தது.

(ஈ) மாகொல்லஹேன காணி மற்றும் கட்டிடம் கிரிஉல்ல பொலிஸ் நிலையத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வாடகையான 1989 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 312,918 வருமானம் பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும் பிரதேச செயலாளரினால் இக் காணியின் உரித்தினை பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தமையால் நிலுவை மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(உ) சினிமா கொட்டகையொன்றை நடாத்திச் செல்வதற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கிரிஉல்லவில் அமைந்துள்ள இம்புலகஹமுல வத்த தோட்டத்தின் காணி மற்றும் கட்டிடத்திற்காக அறவிடப்பட்டிருந்த ரூபா 378,785 ஆன நிலுவை வருமானத்தை பதிவழிப்பதற்கு 2013 ஆம் ஆண்டின் போது உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியிலும் நிலுவை வருமானமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) குறிப்பாக இனங்காண முடியாத ரூபா 669,016 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதி காணப்பட்டது.

(எ) ரூபா 2,528,588 ஆன ஊழியர் கடன் மீதியில் மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற 60 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 100,353 தொகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 86,034,616 பெறுமதியான 07 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கணக்கு விடயங்கள் தொடர்பாக திருப்திகரமாக விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்)59 | ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்தின் போதும் சபை அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடொன்று நடாத்தப்பட்டு நிர்மாணங்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு குறித்த ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி 371(2)(அ) | 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்வுசெய்யப்படாத முற்பண மீதி ரூபா 321,978 ஆக இருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 1997 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான கால எல்லையில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 19,819 ஆன நானாவித வைப்பு மீதிகள் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 40,298,324 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 17,530,159 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் முறையே 30,051,802 மற்றும் ரூபா 242,443,846 ஆன மூலதன வருமானம் மற்றும் ரூபா 25,937,319 மற்றும் ரூபா 219,895,405 ஆன மூலதன செலவினத்தை கணிப்பிடப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டின் மிகை ரூபா 44,413,305 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் மிகை ரூபா 40,078,600 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,334,705 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த செயற்பாட்டு வருமானம் ரூபா 152 மில்லியனாக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினமான ரூபா 126 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 26 மில்லியன் அதிகரிப்பொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவினம் ரூபா 26 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மூலதனச் செலவினமான ரூபா 220 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 194 மில்லியன் குறைவொன்றாக இருந்தது.

(இ) மேற்படி நிலைமை காரணமாகக் கொண்டு ஆண்டிற்கான மிகை ரூபா 44 மில்லியனாக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டின் மிகையான ரூபா 40 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 04 மில்லியன் நிதி விளைவுகளில் அதிகரிப்பாக இருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப் பட்டது | 2015 உள்ளவாறான | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | 2014 மதிப்பிடப் பட்டது | 2014 உள்ளவா றான | 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 8,115 | 7,870 | 3,164 | 8,115 | 7,726 | 3,789 |
| (ii) குத்தகை வாடகை | 21,425 | 20,400 | 1,759 | 21,425 | 19,318 | 3,587 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,536 | 1,243 | - | 1,536 | 989 | - |
| (iv) ஏனைய வருமானம் | 120,029 | 122,168 | - | 120,029 | 103,706 | - |
| மொத்தம் | 151,105 | 151,681 | 4,923 | 151,105 | 131,739 | 7,376 |

**2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானத்தில் பட்டியலிடல் | | | | | வருமான சேகரிப்பு | | | | நிலுவை வருமானம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான தலைப்பு | 2015/01/01 இல் நிலுவை | 2015 ஆம்ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | நிலுவையில் சேகரிப்பு | பட்டியலிடல் சேகரிப்பு | எதிர்வரும் ஆண்டிற்கான பெறுவனவு சேகரிப்பு | சேகரித்த தொகை | நிலுவையில் எஞ்சியது | பட்டியலிடப்பட்ட வருமானத்தில் எஞ்சியது | மொத்தம் |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,085,246 | 3,772,254 | 6,857,500 | 1,541,580 | 2,522,178 | 298,321 | 4,362,079 | 1,543,666 | 951,775 | 2,495,441 |
| ஏக்கர் வரி | 648,910 | 77,420 | 726,330 | 25,404 | 31,909 | 0 | 57,313 | 623,506 | 45,511 | 669,017 |
| வாடகை | 490,410 | 12,735,291 | 13,225,701 | 367,389 | 12,390,377 | 0 | 12,757,766 | 123,021 | 344,914 | 467,935 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 880,950 | 880,950 | - | 880,950 | 0 | 880,950 | 0 | 0 | 0 |
| குத்தகை | 1,150,567 | 4,373,501 | 5,524,068 | 341,345 | 3,925,360 | 0 | 4,266,705 | 809,222 | 448,141 | 1,257,363 |
| ஏனைய | 805,454 | 15,369,620 | 16,175,074 | | 15,424,224 | 0 | 15,424,224 | 750,730 | 120 | 750,850 |
| முத்திரைக் கட்டணங்கள் | - | 20,000,000 | 20,000,000 | 22,616,556 | 0 | 0 | 22,616,556 | - | 20,000,000 | 20,000,000 |
| நீதிமன்ற தண்டப்பணமும் | - | 3,000,000 | 3,000,000 | 4,570,901 | 0 | 0 | 4,570,901 | - | 3,000,000 | 3,000,000 |
| மொத்தம் | 6,180,587 | 6022,09,036 | 66,389,623 | 29,463175, | 35,174,998 | 298,321 | 64,936,494 | 3,850,145 | 24,790,461 | 28,640,606 |

**2.3.3 ஆதனவரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் வீதவரி நிலுவை ரூபா 2,495,421 ஆக இருந்ததுடன் அது வருடாந்த பட்டியலிடலில் அண்ணளவாக 66 சதவீதமாக இருந்தது. அதில் 2016 ஆம் ஆண்டின் யூலை வரையில் ரூபா 868,818 அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) 33 ஆம் விதியின் பிரகாரம் ஆதனவரி கொடுப்பனவை தவிர்ப்புச் செய்யும் நபர்கள் தொடர்பான பட்டியல் மற்றும் தடை செய்யும் பிடியாணை என்பவற்றை ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் வீதவரி எழுதுனரால் தயாரிக்கப்பட்டு செயலாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை.

(இ) பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) 143(i) பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பிடு செய்யப்பட வேண்டிய போதிலும் சபையின் காணப்படும் ஆதனவரி மதிப்பீடு 09 ஆண்டுகளை மிகைத்திருந்தது.

(ஈ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 136 பிரிவின் பிரகாரம் சபை எல்லைக்குள் அமைந்துள்ள சபைக்குரிய வரி செலுத்தும் சகல காணிகள் மற்றும் கட்டிடங்களில் குத்தகையாளர்களிடமிருந்து ஆதன வரியோ அல்லது ஏக்கர் வரியோ பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும் சபைக்கு சொந்தமான 245 ஆதனங்களுக்கு உரிய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 ஆதன வரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 129(2)(அ)(ஊ) பிரிவுகளின் பிரகாரம் பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய குத்தகை வாடகையை முறைப்படி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம்**

வடமேல் மாகாண பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 4,888,657 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,222,165 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டு இறுதியில் வடமேல் மாகாண பிரதான செயலாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 9,430,769 ஆக இருந்தது. அதில் ரூபா 6,490,861 ஆன மீதியொன்று 2016 மே 10 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ) சபையின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சபைக்குரிய சொத்துக்கள் உள்ளடக்கப்படும் வகையில் பேணப்படாதிருந்ததுடன் காப்பறையில் உள்ள உறுதிகளின் விபரங்கள் மாத்திரம் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகவும் உறுதிகள் காணப்படாத காணிகளின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வட்டகொட வியாபார தொகுதியில் 05 கடைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 383,590 வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டு முதல் இங்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் இக் கடைகள் வழங்கப்பட்டிருந்தன. இவ் வியாபார தொகுதிக்காக நீர் மற்றும் மின்சார வசதிகள் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படாமை காரணமாக சபைக்கு பட்டியலிடக் கூடியதாக இருந்த ரூபா 2,000,000 இற்கு மேற்பட்ட பணம் சபையால் இழக்கப்பட்டிருந்தது.

(இ) 13 மில்லியனுக்கு மேற்பட்ட பணம் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கந்தானை கெதர கடைத் தொகுதியின் 10 கடைகளில் 07 கடைகளுக்காக கேள்வி சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன் கேள்வி கோரப்பட்ட கடைகளில் சில கடைகள் திறக்கப்படாமல் இருந்தமையால் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இவ்வியாபார தொகுதியில் எவ்வித வருமானமும் கிடைத்திருக்கவில்லை.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரிய திகதியில் பங்களிப்பு தொகை செலுத்தப்படாமை காரணமாக ரூபா 93,283 ஆக மிகை கட்டணமொன்று சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 7,000 மாத்திரம் உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 8,558 மிகை கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,720 தொகை சபை அறவிடப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல் நடவடிக்கை திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதி PFD/RED/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நீண்டகால நோக்குடன் உரிய அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கங்களை நிறைவேற்றுவதை இலக்காக கொண்ட செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு புறம்பான வகையில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 4.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் ஆரம்ப தரத்தின் 06 பதவிகளுக்காக 36 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் பதவியணியினரை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) ஊழியர் கடன் கட்டுப்பாடு